# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1469/2 - 2006 ඔක්තෝබර් 30 වැනි සඳුදා - 2006.10.30

1469/2 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

### தென் மாகாண மாகாண சபை

1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நிதி நியதிச் சட்டம்

**7 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

தென் மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள, அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண சபையின் முதலமைச்சரும் நிதியமைச்சருமாகிய குஸ்டின்னா வடு சான் விஜயலால் த சில்வா ஆகிய நான், கீழ்க்குறிப்பிட்டுள்ள விற்பனை வரியை இவ்வுத்தரவின் மூலம் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவு/01.11.2006 ஆந் திகதி முதல் அமுலாகும் வண்ணம் உத்தரவிடுகிறேன்.

| | | |
|---|---|---|
| (அ) | சாராயம் (பதப்படுத்தப்பட்ட சாராயம் கலக்கப்பட்ட சாரயம் உட்பட) பியர், வைன், கள்ளு மற்றும் வேறு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபான வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யும் வியாபாரம் சம்பந்தமாக | நூற்றுக்கு 2 |
| (ஆ) | சிகரட் உற்பத்தியாளரிடமிருந்து அல்லது சிகரட் இறக்குமதியாளரிடமிருந்து அல்லது கொள்வனவு செய்து சிகரட் விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை சம்பந்தமாக. | நூற்றுக்கு 2 |

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1991, சனவரி 12 ஆந் திகதியும் 644/29 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட உத்தரவில் 1 ஆவது பிரிவினால் ஆக்கப்பட்ட 1% வரி அளவை மேலே (அ), (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்களின் விற்பனை சம்பந்தமாக மாத்திரம் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவில் /(2006.11.01 ஆந் திகதி முதல் இவ்வுத்தரவு அமுல்படுத்தப்பட்டதன் பின் ஏற்படும் ஏதாவது வியாபார விற்பனை வரியொன்று சம்பந்தப்பட்ட ஏற்புடமைகள் இல்லாதொழிதல் வேண்டும்.

குஸ்டின்னா வடு சான் விஜயலால் த சில்வா,
முதலமைச்சரும் நிதி அமைச்சரும்.

தென் மாகாணத்தின் மாகாண சபையின்
முதல் அமைச்சர் காரியாலயம்,
காலி,
2006, ஒற்றோபர் 25.

11- 273


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.